# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 68*
*டிசம்பர், 2014*
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



*சிறப்பாசிரியர்*
**முனைவர் வே.ராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் பெ.கணேசமுருகன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**முனைவர் ம.லோகேஸ்வரன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

*ஆசிரியர் குழு*
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்



*வெளியீடு:*

**தமிழ்த்துறை**

***கே.எஸ். ரங்கசாமி***
***கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)***
*திருச்செங்கோடு – 637 215,*
*தமிழ்நாடு, இந்தியா.*
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu



***©K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)***

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.*


## *தலையங்கம்*

*ரேசன் கடை, திரையரங்கம், சந்தை, டீக்கடை, திருவிழா, பொருட்காட்சி, பீச், பார்க் என்று எம்மின் மக்கள் அன்றாடம் கூட்டம் கூட்டமாய் இருக்கும் இடங்கள் இவைபோல் ஏராளம் உள்ளன. இவையெல்லாம் ஏதோ இளைஞர் கூட்டம், சிறுவர் கூட்டம் என்று வகைப்படுத்திவிட முடியாது. காரணம் ஆண், பெண் என அனைவரும் ஆஜராகி தங்களது சுய அடையாளங்களை இழந்து வருகின்ற இடங்கள். இவ்விடங்கள் எல்லாம் நியாய, அநியாய தர்க்கங்களைப் பேசுவதற்கான களங்கள் என்று நமது பொதுப்புத்தியில் யாரோ என்றோ நடு மண்டையில் ஆணியடித்துச் சென்றுள்ளனர். தமிழகம் தனது செல்வாக்கினைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது என்றார்கள் கூட்டம் காணவில்லை..*

*மீனவர்களை நாள்தொறும் சுட்டுக் கொள்கின்றனர். கூட்டம் இல்லை. பலாத்காரங்கள் கண்ணுக்கெதிரே நடக்கின்றன. கூட்டம் இல்லை.*

*கூட்டம் கூடுவது அவ்வளவு எளிதல்ல. காரணமில்லாமல் கூடும் கூட்டம் மனித குலத்தின் இழிவு என்று பெயர் பெறும்..*

## கவிதைகள்

துடைப்பம் ----------------------------------------------3
தேடல்-----------------------------------------------------3
ஏதுமில்லை-----------------------------------------------4
எங்கள் ஆசிரியர்-----------------------------------6
இனிமையான தமிழ்------------------------------7
சிறைச்சாலைக்காக-------------------------------7
ஹைக்கூ------------------------------------------------9
வறுமை------------------------------------------------10
பெற்றும் பயனில்லை--------------------------16
உயிர் நட்பு-----------------------------------------21
தாய்மை----------------------------------------------24
வறுமை-----------------------------------------------25
ஆயுத பூஜை---------------------------------------25
நட்பு--------------------------------------------------26
வாழ்க்கை-------------------------------------------31
ஆண்--------------------------------------------------32
சுதந்திரக் காற்று--------------------------------31
விடியல்---------------------------------------------28
கடவுள்----------------------------------------------29
அப்பா-----------------------------------------------29
தந்தை தேசம்-------------------------------------27

## சிறுகதைகள்

பேருந்து நிலையம் -----------------------------11
அறிவுப்பந்தயம்------------------------------------17
ஊக்கம் --------------------------------------------30

## கட்டுரை

நூலகம்-----------------------------------------------5

## குறிப்புகள்

கவிஞர்கள்,நூலாசிரியர்கள்-----------------4
ஊர்ப்பெயர்களில் கோட்டை----------------6
மாவட்டங்களும் அடைமொழிகளும்----8
அரிய தகவல்கள்-----------------------------23

## துடைப்பம்..

*பாரத புதல்வர்களின்*
*நெறி தவறியதால்*
*வந்த குப்பைகளைத் தூளாக்கி*
*கிடைத்த*
*மாசுக்களின் இருப்பிடம்*
*இந்த மாந்தர்களின்*
*மனம் இடஆக்கிரமிப்பு அல்ல..*
*மன அழுக்கினால் வந்த ஆக்கிரமிப்பு*
*இவர்களைக் கூட்டிச் சுத்தமாக*
*வைக்க வந்தவனே!*
*நான் யார்? நான் யார்?*
*அரசியல் சூழ்ச்சியால்*
*சூடும் ஒட்டடையால்*
*உருவானதோ..?*
*அவர்களையும்*
*மறுமுனையில்*
*பந்தாடும் மகா கெட்டிக்காரன் நான்..*
*அசுத்தம் என்னும் ஆவிகளை*
*நெருப்பு முகத்தோடு*
*அழிக்க வந்த*
*கோஸ்ட் ரைடர் நான்..*
*என்னைப் பயன்படுத்தி*
*பாரத தாயின்*
*அங்கங்களில் உள்ள*
*அசுத்தங்களை அழித்திடலாம்..*

***மு.ஈஸ்வரன்***
***வேதியியல் இளங்கலை முதலாமாண்டு***

## தேடல்

*மௌனம்*
*என்னுள் அரங்கேறியது..*
*பின்தான்*
*உலகத்தை நான் உணர்ந்தேன்..*
*கேள்விகள்*
*என்னைக் காயப்படுத்தின..*
*மௌனம்*
*என்னைக் காத்தது..*
*பதில்களை நான் தேடினேன்*
*உலகத்தை நான் உணரும் முன்..*
*அன்பு கூட பாரமாகியது..*
*தினம் நினைக்கத் தொடங்கினேன்..*
*நினைத்த பின்பும்*
*பாரமாகியது..*
*தவித்தேன் பின் சோகமாகியது..*
*கொதித்தேன்*
*பின் தெளிந்தேன்..*
*எதுவுமில்லை..*
*எதுவுமில்லை..*
*என்றபின்*
*சாந்தமானது…*
*அன்பு நட்பு பாசம்*
*எது நிஜம்?*
*எல்லாம் அறிந்த பின்பு*
*மெல்ல*
*எழுதத் தொடங்குகிறேன்*
*என் கவிதையை..*

***மு.சிந்துஜா***
***வேதியியல் இளங்கலை முதலாமாண்டு***

## கவிஞர்கள், நூலாசிரியர் சிலரின் காலமும் நூற்றாண்டுகளும்

*தாயுமானவர் - கி.பி.17 ஆம் நூற்றாண்டு*

*அ.சீனிவாச ராகவன் - கி.பி.1861 முதல் 1941வரை*

*அழகிய சொக்கநாதர் - கி.பி.19 ஆம் நூ.*

*செயங்கொண்டார் - கி.பி.12ஆம் நூ.*

*விளம்பிநாகனார் - கி.பி. 200 இக்கு முற்பட்டது*

*திருமங்கையாழ்வார் - கி.பி. 9 ஆம் நூ.*

*சேக்கிழார் - கி.பி.12 ஆம் நூ.*

*உமறுப்புலவர் - கி.பி. 17 ஆம் நூ.*

*கணிமேதாவியார் - கி.பி. 5ஆம் நூ.*

*மிளைகிழான் நல்வேட்டனார் - சங்ககாலம்*

*நல்லந்துவனார் - சங்ககாலம்*

*சாலை இளந்திரையன் - 6.9.1930 - 4.10.1998*

*சீத்தலைச்சாத்தனார் - கி.பி.2 ஆம் நூ.*

*கா.நமச்சிவாயர் - 1876 – 1936*

*திரு.வி.க. – 1883 – 1953*

*திருநாவுக்கரசர் - கி.பி. 7 ஆம் நூ.*

*பாவலரேறு பெருஞ்சித்தனார் - 1933-1995*

*பாரதியார் - 1882 – 1921*

*பாரதிதாசன் - 1891 – 1964*

*மாணிக்கவாசகர் - கி.பி. 9ஆம் நூ.*

*இளங்கோவடிகள் - கி.பி.2ஆம் நூ.*

*கம்பர் - கி.பி.12ஆம் நூ.*

*குலசேகர ஆழ்வார் - கி.பி.9ஆம் நூ.*

*மீரா – 1938 -2002*

*புதுமைப்பித்தன் - 1906-1948*

*சுந்தர ராமசாமி – 1931-2005*

*பவணந்திமுனிவர் - கி.பி.12-13*

*ஔவையார் - கி.பி.12 ஆம் நூ.*

*பெரியாழ்வார் - கி.பி. 9 ஆம் நூ.*

*முதலாழ்வார்கள் - சங்கமருவிய காலம்*

**பா.பிரியதர்ஷினி**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## ஏதுமில்லை..

*ஞானத்தை விட அதிக மகிழ்ச்சி தரக்கூடியது ஏதுமில்லை...*

*கஞ்சத்தனத்தை விட மோசமான வியாதி ஏதுமில்லை...*

*கோபத்தை விட பயங்கரமான பகைவர் எவருமில்லை..*

*வறுமையைவிடக் கொடுமையான கஷ்டம் எதுவுமில்லை..*

*தமிழைவிடச் சிறந்த மொழி எதுவுமில்லை..*

*கல்வியைவிடச் சிறந்த செல்வம் எதுவுமில்லை..*

**பா.பிரியதர்ஷினி**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## நூலகம்

*நூலகம் எனும் சொல்லைக் கேட்டவுடன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான உணர்வு தோன்றும். நூலகத்தில் நிலவும் அமைதி, நூல்களின் ஒழுங்கான வரிசையமைப்பு, பழைய புதிய நூல்களின் கலப்படமான மணம்,நேரம் கடந்தது தெரியாமல் அங்குள்ள நூல்களைப் படித்துப் பரவசமடைவது என நூலகம்பற்றிப் பலவகையான எண்ணங்கள் மனதில் எழும்.*

### நூலகத் தோற்றம்

*கல்வி மக்களின் தத்தம் எண்ணங்களையும் அதனால் விளைந்த அறிவையும் பகிர்ந்து கொள்ளத் தூண்டியது. இதுவே புதிய இலக்கணங்களும் இலக்கியங்களும் தோன்றக் காரணமாயிற்று. நாடு முன்னேற மக்களைக் கல்வியறிவு பெற்றவர்களாகவும் நற்சிந்தனையாளர்களாகவும் பல்வேறு துறைகளில் வல்லுநர்களாகவும் ஆக்குதல் இன்றியமையாதது. இது மெய்ப்பட பல்துறை நூல்கள் அடங்கிய பல்வேறு நூலகங்கள் திறக்கப்படவேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்றது. நூல் ஒன்று தனியொருவரிடம் இருந்தால் இருந்தால் அதனால் பயன் ஒன்றுமில்லை. அவையே பொதுவில் இருந்தால் பயன் 'மரம் உள்ளூர்ப் பழுத்ததைப் போன்று' அது பலருக்கும் பயன்படும். அதனால் தான் இந்தியா உட்பட உலக நாடுகள் எங்கும் பொது நூலகங்கள் திறக்கப்பட்டன.*

### நூலகத்தின் வேறு பெயர்கள்

*புத்தகச் சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசக சாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம் என நூலகம் பல்வேறு பெயர்களால் அழைக்கப் பெறுகின்றது. ஆங்கிலத்தில் லைப்ரேரி என்றும் இலத்தீனில் லிப்ரா என்றும் அழைக்கப்பெறுகின்றது. லிப்ரா என்பதற்குப் புத்தகம் என்று பொருள்.*

### தமிழகத்தின் பழைமையான நூலகங்கள்

*சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சை (1820)*

*அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை*

*கன்னிமாரா நூலகம், சென்னை (1869)*

*சென்னைப் பல்கலைக்கழக நூலகம் (1907)*

*அண்ணாமலைப் பல்கலைக்கழக நூலகம், சிதம்பரம் (1929)*

*டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை(1947)*

*மறைமலை அடிகளார் நூலகம், சென்னை(1958)*

*மதுரைக் காமராசர் பல்கலைக்கழக நூலகம் (1966)*

*உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், சென்னை(1970)*

*தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக நூலகம் (1981)*

### நூலகமும் நாமும்

*நூலகத்தில் உள்ள நூல்களைக் கிழியாமலும் சேதமடையாமலும் பாதுகாத்தல் நமது கடமையாகும்.அஃது அடுத்தவருக்குப் பயன்பட ஏதுவாயிருக்கும். வாழ்வில் வெற்றி பெற நூலகங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவோம்.. அறிவு வளரவும் ஆற்றல் மிளிரவும் நூல்களைப் படிப்போம்..*

*நூல்களைப் பேணிக்காப்போம்..!*

*நூல்களைப் போற்றுவோம்..!*

**பா.பிரியதர்ஷினி**

**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## ஊர்ப்பெயர்களில் கோட்டை

*நிலக்கோட்டை தம்பிக்கோட்டை, பெரியகோட்டை, பட்டுக் கோட்டை, செங்கோட்டை, அருப்புக் கோட்டை,பாளையங்கோட்டை, செஞ்சிக் கோட்டை, மலைக் கோட்டை, தேவக் கோட்டை, அதனக் கோட்டை,வேப்பக் கோட்டை, இராயக் கோட்டை, குண்டுக் கோட்டை, வட்டக் கோட்டை, கந்தர்வக் கோட்டை, சித்தையன் கோட்டை, அனுமந்தராயன் கோட்டை, தேன்கனிக் கோட்டை, நாட்டரசன் கோட்டை, புதுக்கோட்டை, சித்திரைக் கோட்டை, கந்தக் கோட்டை, செவரக் கோட்டை, விசாலயன்கோட்டை, கீழக் கோட்டை, அரளிக் கோட்டை, முத்தனங் கோட்டை, கோட்டையூர்,*

**நா.சரண்யா**

**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## எங்கள் ஆசிரியர்

*கற்றவர்க்குச் சென்ற*
*இடமெல்லாம் சிறப்பு..*
*கற்பிப்பவருக்கோ அந்த*
*சொர்க்கத்திலும்*
*உண்டு வரவேற்பு..!*
*போராட்ட வாழ்க்கைக்கு*
*உதவும் படிப்பு..*
*அதைக் கொடுக்கத்தான்*
*ஆசிரியரின் இதயத் துடிப்பு..*
*தீபங்கள் எரிய*
*இவர்கள் தான் தீக்குச்சி..*
*வாழ்க்கையில் ஒளிர*
*இவர்கள் தான் ஏணிப்படி..*
*அன்பை ஊட்டி*
*அறிவை நிலைநாட்டி*
*தீயனவற்றை விரட்டி*
*என்றும் நல்வழி காட்டி*
*நிற்பவர் தான் ஆசிரியர்..*
*தலைகுனிந்து படி என்பார்*

*நாளை தலைநிமிர்ந்து வாழ..*
*கஷ்டப்பட்டுப் படி என்பார்*
*நாளை இஷ்டப்பட்டு வாழ..*
*கண்விழித்துப் படி என்பார்..*
*நாளை கண்கலங்காமல் வாழ..*
*வாழ்க்கை முழுதும்*
*இவர்கள் நமக்கு ஒரு பாடம்..*
*ஆசிரியர்கள் என்போர்*
*உயிருடன் நடமாடும்*
*ஒரு போதி மரம்..*
*என்றும் துணைவருவது*
*ஆசிரியரின் கருத்து*
*என்றும் அதை*
*நெஞ்சில் நிலைநிறுத்து..*

***நா.சரண்யா***
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## இனிமையான தமிழ்

*அழகான உன்னை*
*என் விழிகள்*
*வாழ்நாள் முழுவதும்*
*தேடிக்கொண்டே இருக்கும்..*
*என் உதடுகள் உன்னையே*
*உச்சரித்துக் கொண்டிருக்கும்..*
*தாய்முகம் நோக்கிய*
*மழலை போல்*
*உன்னையே இமைக்காமல்*
*பார்த்துக்கொண்டிருப்பேன்..*
*எனது வாழக்கையும் நீயே..*
*என்னை வாழவைக்கப் போகும்*
*தெய்வமும் நீயே.!*
*என் அன்னைத்தமிழே!*
*தண்டமிழே!*
*மழலைமொழியே!*
*நஞ்சில்லாமல் அனைவரையும்*
*கெஞ்ச வைக்கும் கொஞ்சு தமிழே!*
*இந்த இப்பிறவியில்*
*நீதான் நான்*
*நான் தான் நீ..!*

***ம.நவீனா***
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## சிறைச்சாலைக்காக

*இழந்த உயிர்களோ கணக்கில்லை*
*இருமிச் சாவதில் சிறப்பில்லை*
*இன்னும் என்னடா விளையாட்டு*
*எதிரி நரம்பிலே கொடியேற்று*
*வீரத்தைக் குண்டுகள் துளைக்காது*
*வீரனைச் சரித்திரம் புதைக்காது*
*நாட்டை நினைக்கும் நெஞ்சங்கள்*
*வாடகை மூச்சில் வாழாது..*
*போராடித் தோற்றால்*
*அது தோல்வியல்ல..*
*போராடவே இல்லையென்றால்*
*நீ வாழ்ந்தது வாழ்க்கையல்ல*
*பன்றிக்கும் கிடைக்கும்*
*தினம் தினம் சோறு*
*இனி வென்று உண்பதே*
*உப்புள்ள சோறு..*
*சாதிகளை நம்பி புண்ணியமில்லை*
*அரசியலை நம்பி பலனில்லை*
*ஆயுதங்களை நம்பியும்*
*உணர்வில்லை*
*இனி வழி ஒன்றுதான்*

*எதிர்த்து நிற்பது*
*துணிந்து முன்னேறுவது*
*இதயத்தைக் கிழிக்க*
*நெஞ்சைக் காட்டுவது..*
*வாழ்வது சாத்தியமோ*
*இல்லையோ*
*நாம் வெல்வது நிச்சயம்..*

***ரா.யுவராஜ்***
***இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு***

**முக்கிய சிகரங்கள்**

*எவரெஸ்ட் - நேபாளம் - 8,848 உயரம்*
*தௌலாகிரி – நேபாளம் - 8,167 உயரம்*
*நங்கபர்வதம் - இந்தியா – 8,125 உயரம்*
*நந்தாதேவி - இந்தியா – 7,817 உயரம்*
*மவுண்ட்காமத் - இந்தியா – 7,756 உயரம்*
*சல்போரோ கங்கிரி - இந்தியா – 7,742 உயரம்*
*குர்லாமண்டதா – திபெத் - 7,782 உயரம்*
*திரீச்மிர் - பாகிஸ்தான் - 7,700 உயரம்*
*மின்யா கொன்கா – சீனா – 7,690 உயரம்*
*முஸ்தாக் அதா – சீனா – 7,546 உயரம்*

***கி.பிரசாந்த்***
***இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு***

## மாவட்டங்களும் அடைமொழிகளும்

*இராமநாதபுரம் - புனித பூமி*
*ஈரோடு – மஞ்சள் நகரம்*
*கருர் - நெசவாளர்களின் வீடு*
*கன்னியாகுமரி - இந்தியாவின் தென்னில பூமி*
*காஞ்சிபுரம் - ஆலைய நகரம், ஏரி மாவட்டம்*
*கோயம்புத்தூர் - தென்னக மான்செஸ்டர்*
*சிவகங்கை – சரித்திரம் உறையும் பூமி*
*சென்னை – தென்னிந்திய கலாச்சார நுழைவாயில்*
*சேலம் - மாம்பழ நகரம்*
*தஞ்சாவூர் - நெற்களஞ்சிய பூமி*
*தருமபுரி – தோட்டப்பயிர் பூமி*
*திண்டுக்கல் - பூட்டுக்களின் ராஜா*
*திருச்சி – மலைக்கோட்டை நகரம்*
*திருநெல்வேலி – தென்னிந்திய ஆக்ஸ்போர்டு*
*திருப்பூர் -பின்னலாடைத் தலைநகரம்*
*தூத்துக்குடி - முத்து நகரம்*
*நாகப்பட்டிணம் - சமய நல்லிணக்க பூமி*
*நாமக்கல் - முட்டை நகரம்*
*நீலகிரி – மலைகளின் ராணி*
*மதுரை – கோவில் நகரம், உறங்கா நகரம்*

விருதுநகர் - வியாபார நகரம்

வேலூர் - கோட்டைகளின் நகரம்

**சு.சுரேகா**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## உலகப் பாலைவனங்கள்

சஹாரா – வட ஆப்பிரிக்கா – 9064650 பரப்பளவு

கோபி – சீனா – 1294950 பரப்பளவு

படகோனியன் - அர்ஜென்டினா - 673374 பரப்பளவு

தார் - இந்தியா, பாகிஸ்தான் - 453232 பரப்பளவு

கிப்சன் - ஆஸ்திரேலியா – 310788

நமீப் - ஆப்பிரிக்கா – 33668

அட்டகமா – சிலி – 139854

மோஹேவ் - அமெரிக்கா – 139854

இராணியன் - இரான் - 258990

தாக்ளாமாக்கன் - சீனா – 271939

**சு.ஜமுனா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

## 18 படிகளின் தத்துவம்

தர்ம சாஸ்தாவின் 18 படிகளும் தத்துவத்தை விளக்குகின்றன. ஒவ்வொரு படியில் அடியெடுத்து வைக்கும் பொழுது ஒவ்வொரு தீய பழக்கமும் நம்மைவிட்டு நீங்குவதாக ஐதீகம்

முதல்படி – காமம்

2 – குரோதம்

3 – லோபம்

4 – மோகம்

5 - மூர்க்கம்

6 – மாச்சர்யம்

7 – வீண்பெருமை

8 - அலங்காரம்

9 – பிறரை இழிவுபடுத்துதல்

10 – பொறாமை

11 – இல்லப்பற்று

12 – புத்திர பாசம்

13 – பணத்தாசை

14 – பிறவி வினை

15 – செயல் வினை

16 – பழக்கவினை

17 – மனம்

18 – புத்தி

**தொகுப்பு - த.மேனகா**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## ஹைக்கூ.....

**க**விதை

கவிஞனுக்கும் முன்னால்
படிக்கப்படுகிறது
பேனாவின் நிழலாய்..

**ஓ**ய்வே இல்லாத
தெருவிளக்கிற்கு ஓய்வளித்தது
மின்வெட்டு..

அன்றாடம் நிகழ்ந்தும்
அனேகரால் காணப்படாத
கண்கொள்ளாக் காட்சி
இரவு வானம்..

நான் நினைத்ததெல்லாம்
பேசிவிட்டாய்
உன்னையே மறந்து
என்கனவில்..

**பு.கமலக்கண்ணன்**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## சுற்றுச்சூழல்

மலைபோல் கிடக்கும்
நெகிழி காகிதங்கள்
விலைப்பட்டியலோடு
விளைநிலங்கள்
பூத்துக் குலுங்கும்
கருவேல மரங்கள்
காற்றிற்கு வண்ணமிடும்
தொழிற்சாலைகள்
பல வண்ணங்களில் ஓடும்
ஆற்றுநீர் சுற்றுச்சூழலைப்
படம்பிடித்துக் காட்டியது
என் சன்னலோர
பேருந்து பயணம்..

**பு.கமலக்கண்ணன்**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## புலம்பல்..

ஊருடன் சேர்ந்து சிரிக்கத்
தொடங்கிவிட்டது
நான் வளர்த்த
செம்பருத்திச் செடி
புலம்புகிறாள் முதிர்கன்னி..!

**பு.கமலக்கண்ணன்**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## தாயே.!

தாய்..!
இருளில் முடங்கிக் கிடந்த எனக்கு
உயிர் என்ற
வெளிச்சத்தைத் தந்த
உனக்கு நன்றிகள் போதாது..
உன்னிடமிருந்து
என்னைப் பிரித்துவிட்டாய்
என்னிடமிருந்து உன்னை
என்றும் யாரும்
பிரித்திட முடியாது..
கருவறை எனக்குத் தெரியாது
ஆனால் உன் மனவறை தெரியும்..
என்றாவது ஒருநாள்
உன்னிடம் மிடுக்குடன் நிற்பேன்..
அப்போது என் நெற்றியில்
பதிக்கும் முத்தம் ஒன்று போதும்
வாழ்வின் இறுதியை அடைந்திட..

**சுலைமான்**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## வறுமை

ஒத்தையடி பாதையில
ஒருத்தியா போறவளே
காடு மேடு அலைபவளே
காலுக்குச் செருப்பில்லே
ஊருக்கெல்லாம்

விறகு கொடுப்பவளே
உன் வீட்டு அடுப்பில்
பூனை உறங்குதே..
கை ரெண்டும் காச்சிடுச்சு
மனசு கொஞ்சம் நொந்துடுச்சு
இருந்தாலும் வழியில்லை
இருக்கு ரெண்டு பொட்டப்புள்ள
பொறந்த இடம் போச்சு
புகுந்த இடம் தொலச்சு
தனிமையில நிக்குறேன்
என் தாகத்துக்குத் தண்ணியில்லை
முட்டி மோதிப் பாத்தாச்சு
மனசெல்லாம் வெளுத்துப் போச்சு
ஊரடங்கிப் போன பின்னே
எனக்கு மட்டும் என்ன வேலை..?
போராடி ஜெயிக்கச் சொல்லி
என் அப்பன் ஆத்தா கத்துக்கொடுத்தது
மறக்காம செய்து வாரேன்
தினம் தினம் போராடிக்கொண்டு..
வழிநெடுக பூ பூத்தும்
பறித்துக் கொள்ள மனமில்லை..
அப்டியே பறித்தாலும்
வைத்து ஒன்னும் புண்ணியமில்லை..
இதுதான் வாழ்க்கையென்று
எப்பவோ முடிவு செஞ்சேன்..
இன்னும் விட்டபாடில்லை
வறுமைப் பேய விரட்டவில்லை

**ச.கௌசல்யா**

**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## பேருந்து நிலையம்

பலாப்பலோய்.. பலாப்பலோய்.. பாக்கெட்டு பத்துருவா.. தேன்சொலை தேன்சொலை இப்படி அந்த வியாபாரி கத்துனது பல பேருக்கு எரிச்சல உண்டாக்கி இருக்கனும். யார்ரா இவன் காதுக்குள்ள வந்து கத்திக்கிட்டு? னு தூக்கத்துல திட்டிக்கிட்டே மறுபடியும் ஒரு பெரியவர் தூங்குனத என்னைத் தவிர அநேகம் யாரும் கவனித்திருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் எல்லாரும் அசதியில் தூங்கிக்கொண்டு வந்ததுதான் அதற்குக் காரணம்..

காரைக்குடியில் இருந்து திருச்சிக்கு வர அதிகபட்சம் இரண்டரை மணிநேரம் என்பது பழக்கப்பட்ட பயணிகளுக்குத் தெரியும். என்னமோ தெரியல அந்த டிரைவர் இழு இழுனு 3 மணி நேரத்திற்கு இழுத்துட்டார்..

திருச்சிக்கு வருவதென்றால் பெரும்பாலும் சென்னை போகிற பேருந்து நின்றால் நடத்துனர் அனுமதியோடு ஏறிவிடுவேன். விழாக் காலங்களில் ஏறுவது சிரமம். அப்பொழுது ஒன் டு ஒன் பேருந்து நின்றால் ஏறுவது வழக்கம். இந்த மாதிரியான பழக்கத்திற்குக் காரணம்

காரைக்குடி – திருச்சி வழிப்பாதையில் ஏராளமான நிறுத்தங்களும், கூட்ட நெரிசலும் தான். எது எப்படியோ சாதாரண பேருந்திலோ எக்ஸ்பிரஸ் என்று பெயரளவில் போட்டுக் கொண்டு ஊரை ஏமா(சு)ற்றும் பேருந்துகளிலோ பெரும்பாலும் ஏறுவதைத் தவிர்த்தே வந்துள்ளேன் அண்மைக் காலமாக...
இப்படி எத்தனை நாள் அமையும்? நாம் நெனச்ச மாதிரி நடக்காத போது தான் வாழ்க்கையின் மீதான வெறுப்புணர்வு பீறிட்டுக் கொப்பளிக்கிறது. இதுவே தொடர்ந்து நடக்கும் போது முழுமையாக நம்மை வெறுக்க நேரிடுகிறது..
அப்படி வெறுத்த நாளில் தான் இப்பொழுது பயணம் செய்து கொண்டிருக்கிறேன்..
அந்தப் பலாப்பழத்தை யாரும் வாங்கியதாக தெரியவில்லை. இன்னும் சொல்ல வேண்டுமானால் யாரும் விழித்துக் கவனித்ததாகக் கூடத் தெரியவில்லை.
வெள்றி பிஞ்சு.. வெள்றி பிஞ்சு.. வெள்றி பிஞ்சோய்.. அண்ணே வேணுமா..? யாரோ நடுத்தர பெண்மணி பேருந்தின் சன்னல் வழியாகக் கூவிக்கொண்டிருந்தாள். பேருந்துக்குள் தலைப்பாகை கட்டிக்கொண்டிருந்த ஒரு பெரியவர் மட்டும் வாங்கிக் கொண்டார். மொளகாப்பொடி போட்டுத்தாம்மா..? காரமா சாப்பிட்டுப் பழக்கம் போல.. பேருந்து புறப்பட்ட இடம் செட்டிநாடு அல்லவா?
இஞ்சிமரப்பா இஞ்சிமரப்பா...
எவ்வளவு நல்ல பதார்த்தம்? யாரும் சீண்டவில்லை
வாய்ப்பாடு அட்டை, ரேசன் கார்டு அட்டை செல்போன் கவர், ஸ்போக்கன் இங்கிலீஷ் னு மெது மெதுவா சொல்லிக்கொண்டு முதியவர்களையும் சிறுசுகளையும் குறிவைத்து விற்பனையைத் தொடங்கினார். இந்தப் பெரியவரை திருச்சிக்கு வரத் தொடங்கிய காலக்கட்டங்களில் இருந்து பார்த்து வர்றேன்.. அதே தொழில்தான். பொருள்களும் அதே தான். கூடுதலாக மூணு பிரஷ் பத்து ரூவா எனும் வாசகத்தை மட்டும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்.
ஏம்ப்பா தம்பி எவ்வளோ நேரம் பஸ்சு நிக்கும்..?
தெரியலண்ணே.. முன்னாடி நிக்கிற ரெண்டு பஸ்சும் எடுத்ததும் இத எடுப்பாங்கனு நெனக்கிறேன்..
சரிப்பா அதுக்குள்ள வந்துடுவேன். சத்த எடத்த பாத்துக்குறியா? ஒண்ணுக்கடுச்சுட்டு வந்துடுறேன் னு என்னோட பதிலை எதிர்பார்க்காம கெளம்பிப் போய்ட்டாரு.

லேடிஸ் அண்ட் ஜெண்டில்மேன்.. பேருந்தில் பயணிக்கிறவர்களின் அன்பான கவனத்திற்கு..

ஒரு நிமிஷம் கவனிங்க சார்.. இப்ப பேருந்துல போகும் போதோ வீட்டுல இருக்கும் போதோ தலைவலி நம்மள பிச்சு எடுத்துடும். அதுலயும் பாருங்க ஒன்சைடு, டபுள்சைடு தலைவலிலாம் வரும். இனிமே அந்த கவலை வேணாம். பாருங்க சார் பாருங்க பெங்களூர் பசகுளோடா காட்டுல இருந்து சுத்தமான தானிய வகைகள்ல இருந்து தயார் பண்ண நம்ம தைலத்த இந்த சுத்தமான பஞ்சுல கொஞ்சமா நனச்சுக்கிட்டு ரெண்டு பொட்டுலயும் மெல்லமா அழுத்திக் கொடுத்தீங்கனா அஞ்சே நிமிசத்துல உங்க தலைவலி காணாமப் போயிடும். எல்லா மருந்து கடைகளிலும் கெடைக்கும். வெளில வாங்குனா இருபது ரூபா. ஆனா கம்பெனி வெளம்பரத்துக்காக வெறும் பத்தெ ரூவாய்க்கு தர்றோம்..

வேணுமா சார்..? வேணுமா சார்..?

முழங்கால் வலி, ஜலதோசம், வாய்ப்புண், வயித்தவலி, வாந்தி மயக்கம், வயிற்றுப்போக்கு, மூட்டுவலி எல்லாத்துக்கும் இத தேய்க்கலாம் அஞ்சு நிமிஷத்துல சரியாகலனா என்னனு கேளுங்க ஸ்டாக் கொஞ்சம் தான் சார் இருக்கு.

எல்லா நோயையும் சொன்னதும் ஒன்னு ரெண்டு னு ஆரம்பிச்சு நெருக்கி பத்துப் பேருக்கிட்ட வித்து 100 ரூபா சம்பாரிச்சுட்டான்..

அப்படியே பின்வழியா போயிட்டான் தலைவலி..

டம்முனு கதவ சாத்தி சீட்டுல உக்காந்துட்டாரு டிரைவர். டிர்ர்.. டிர்ர்…டிர்ர். னு உருமிக்கொண்டு நகராமல் நின்று கொண்டிருந்த பேருந்து இப்போ நகருமா? அப்போ நகருமானு கவனிச்சுக்கிட்டே இருந்தேன். மெல்ல நகரத் தொடங்கியது ஆனால் நகரவில்லை. ஆமாம் எதிரே நின்ற பேருந்து தான் நகர்ந்தது. ஆனால் எங்க பேருந்து நகர்ந்த மாதிரியே இருந்தது.

ஆமா பாத்ரூம் போனவர காணோமே…

ஸ்ஸ்ஸப்பா.. வெயிலு கொளுத்துதுப்பா னு கையில ரெண்டு சோளக்கருதோட வந்தாரு.

தம்பி ஒன்னு எடுத்துக்கோங்க..

இல்லங்க பரவால. வேணாம்.

அதுக்கு மேல அவரு கட்டாயப்படுத்தல.

வாங்கிடுவேனோனு பயந்திருக்கலாம். பிடிச்சு வாங்கிருக்காரு போல..

இதற்குமேல் என் கவனம் ஒரே இடத்தில் குவிந்து போயிருந்ததை மிக தாமதமாகத்தான் உணர்ந்தேன். அந்தக் குழந்தைகளின் சேட்டைகளை ரசிக்கத்

தொடங்கியிருந்தேன். அதில் இந்தப் பெண் குழந்தை என்னுடன் சைகை மொழியில் போட்டி போட்டுக் கொண்டிருந்தாள். அவளின் மழலை செய்கைகள் என்னை ஒரு கரிசன கர்த்தாவாக மாற்றிக் கொண்டிருந்தன… இதோ அந்த மழலையின் உலகத்திற்குள் மெல்ல மிக மெல்ல நுழைந்து கொண்டிருக்கிறேன்..

வளைந்த புருவத்தைக் கண்மையால் அழகு தீட்டியிருந்தாள். தன் அண்ணனோடு அவள் அடித்த லூட்டிகளை ரசித்த போது அவன் அண்ணனும் என்னுடன் ஐக்கியமாகிவிட்டான்.

இப்போது இரண்டு குட்டிகளும் என்னைப் பார்த்துக் கொண்டே எனக்காக ஏதேதோ விளையாட்டுகளை அறிமுகப்படுத்திக் கொண்டே இருந்தனர்.

அவர்களின் தீவிரமான ரசிகராக அந்தப் பேருந்தில் நான் மாறிப் போயிருந்தேன் அல்லது மாறிக் கொண்டிருந்தேன்.

எத்தனையோ திண்பண்டங்கள் வந்து போய்க்கொண்டிருந்தன. குட்டிகள் இரண்டும் எவற்றையும் கண்டு கொள்ளவில்லை. சீட்டோஸ் சில்ரன்ஸ் அல்லவா?

மூன்றிருக்கை கம்பியின் வழியாகக் குனிந்து குனிந்து பார்த்துக் கொண்டிருந்தாள் குட்டி தேவதை. நானும் முடிந்தவரை ஹாய் சொல்லிக் கொண்டேயிருந்தேன். இடையிடையே அவள் அம்மாவையும் கவனித்துக் கொண்டதும் தெரிந்தது.

எனக்காகவே அவர்களின் அசைவுகளும் விளையாட்டுகளும் இருந்தது போல் நினைப்பு. ஏன் எனக்காக அவர்கள் இத்தனையையும் செய்து காட்ட வேண்டும்? வேடிக்கைகாரர்களாக அவர்கள் ஏன் மாற வேண்டும்? எந்த மொழியும் இல்லாமல் எப்படி இந்த பார்வைமொழி எங்களுக்குள் வெற்றி பெற்றது?

குழந்தைகள் இந்த உலகின் ஆகச் சிறந்த கலைஞர்கள். நாம் கண்டுகொள்ளாதவரை அவர்கள் எதையும் நமக்கு நிகழ்த்திக் காட்டுவதில்லை. ஆனால் நிகழ்த்திக்காட்ட அவர்களிடம் ஏராளம் உள்ளன. நாம் பெரியவர்களாக இருக்கும்வரை அத்தனை நிகழ்வுகளும் நமக்கு நிகழ்த்திக் காட்டப்படுவதில்லை.

அந்தக் குழந்தைகளின் அம்மா ஏன் பின்னாடியே திரும்பிப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள் என்பதை ஊகிக்க முடியவில்லை..

ஒருவேளை என்னைச் சந்தேகப்படுகிறார்களோ? அல்லது என் குழந்தைகளை தொந்தரவு

செய்யாதீர்கள் என்கிற பார்வையோ அது? ஆனால் பார்வை என்னைத் தாண்டி செல்கிறதே..

ஒன்றும் புரியவில்லை..

மீண்டும் குழந்தைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டேன்..

பேருந்து கௌம்பிடுச்சு. மெல்ல.. மெல்ல.. சிரமப்பட்டு ஸ்டேரிங்கை டிரைவர் வளைத்துக் கொண்டிருந்தது மட்டும் கண்ணுக்கு லேசாக தெரிந்தது..

சார் கொஞ்சம் நிறுத்துங்க. என் வீட்டுக்காரர் இன்னும் வரல. கண்டக்டர் நிறுத்துங்க அவரு வரல.

எங்கமா போனாரு?

பாத்ரூமுதான்..

விசில் சத்தம் இல்லாமலே டிரைவர் நிப்பாட்டிட்டாரு

எங்கமா காணோம்.? இவ்வளவு நேரம் நின்னுச்சுல என்னதான் பண்ணுனீங்க?

ஐயோ காணோமே.. எங்க போய்த் தொலஞ்சாருனு தெரியலயே..

குழந்தைகள் முகம் மாறத் தொடங்கியது. சத்தம் போட்டுக் கொண்டிருப்பது குழந்தைகளின் அம்மாதான்..

போன் பண்ணுங்கம்மா.. எனக்கிட்ட கொடுத்துட்டுப் போயிட்டாரே..

கிழிஞ்சது.. ஏம்மா டைம் ஆகுதுமா. ஏதாவது பண்ணுங்க.

சரி எறங்குடி. டேய் எறங்குடா. அந்தப் பைய எடுத்துக்க.

ரெண்டு குழந்தைகளும் திகைத்துப் போய் நின்றார்கள். அவர்களால் நம்ப முடியவில்லை. அவர்களின் அத்தனை சந்தோசங்களும் ஒரு நொடியில் உடைக்கப்பட்டது.

ஏம்மா எறங்க சொல்லுற? உங்க அப்பா வரவேணாமா? எறங்கு.

இரண்டு பேரும் என்னைக் கவனிக்காமல் அம்மாவின் பதற்றத்தில் அவசர அவசரமாக இறங்கிக் கொண்டிருந்தனர்.

குழந்தைகள் வருத்தப்படுவதில் இவ்வளவு ஓலம் இருக்கிறதா..? அவர்களின் அப்பா வந்துவிடக் கூடாதா? அந்த இரண்டு குழந்தைகளும் மீண்டும் வந்து அதே சந்தோசத்துடன் எனக்கு அருகில் அமர வேணடும் என்று யாரையோ நினைத்துக் கொண்டேன்...

இரண்டு குழந்தைகளும் இறங்குவதைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தப் பையன் தான் ரொம்பவும் வேதனை அடைந்திருக்கிறான் போல. பேருந்து நகர்ந்து கொண்டிருந்ததையே பாரத்துக் கொண்டிருந்த ஏக்கமான பார்வை என்னைக் குடைந்துவிட்டது. பேருந்தின் பின் கண்ணாடி வழியாக பார்த்தபோது

அவர்களின் அப்பா வந்துவிட்டிருந்தார். ஆனால் பேருந்து மிக தூரத்தில் வந்துவிட்டது. நிறுத்திவிடலாமா என்ற எண்ணம் பலிக்கவில்லை. வேகம் காட்டத் தொடங்கியது பேருந்து.

என்ன ஆச்சு எனக்கு? மனதில் ஏதோ ஒரு பிணைச்சல்.. திருச்சி சேரும் வரை குழந்தைகளின் அரட்டைகளைவிட திடீரெனக் கலைக்கப்பட்ட அவர்களின் சந்தோசமற்ற முகம் மனதைப் படும்பயங்கரமாக உறுத்திக் கொண்டே இருந்தது. அப்பாக்கள் மீது கோபம் தீர்ந்தபாடில்லை..

புதுக்கோட்டை பேருந்து நிலையம் வரும் பொழுதெல்லாம் அந்த இரண்டு சிறுவர்களைத் தேடிக் கொண்டே இருக்கிறேன். இந்த முறை பேருந்தை நிறுத்திக் காட்டுவேன் என்கிற தைரியத்துடன்..

எல்லாரும் அதே பொருள்களை அப்படியே விற்றுக் கொண்டிருக்கிறாரகள். ரெண்டு இடத்தையும் தாண்டி இப்போ முதலில் நிற்கிறது பேருந்து. இன்னும் இரண்டு நிமிசத்தில் கிளம்பிவிடுமாம்...

**அகரன் - தமிழ்த்துறை**

## பெற்றும் பயனில்லை

அன்று முன்னோர்கள்
உயிரைத் தியாகம்
செய்து வாங்கிய சுதந்திரம்..
இன்று அரசியல்வாதிகளிடம்
அடிமைப்பட்டுக் கொண்டிருக்கிறது..
மன்னராட்சியில் இருந்து
மக்களாட்சிக்கு வந்தோம்
ஆனால் மக்களுக்கு
ஒரு பயனும் இல்லை..
ஆங்கிலேயனிடம் இந்தியாவை
காப்பாற்றிவிட்டோம்
ஆனால்
அரசியல்வாதிகளிடம் இருந்து
இந்தியாவைக் காப்பாற்றுவது
சிறிது கடினம்தான்..
ஆங்கிலேயனிடம் இருந்து காப்பாற்ற
ஒரு காந்தி வந்தான்
இவர்களிடமிருந்து காப்பாற்ற
இன்னொரு காந்தி வருவாரா..?
காந்தி இல்லையென்றால்
கோட்சேவையாவது அனுப்புங்கள்..

**ஆர்.விக்னேஷ்.**
**கணினி வணிகவியல்**
**ஆ பிரிவு முதலாமாண்டு**

## நட்பு சுடும்

பெண்ணே
ஒரு நிமிடம் மட்டும்
நினைத்துப் பார்..
நட்பு எப்படி
விதைத்தது என்று
அப்பொழுது தான் புரியும்
உடன்பாடில்லாத
காரணத்தால்
நாம் தொலைந்து போனோம்
என்ற உண்மை சுடும்..

**மு.சிந்துஜா**
**இளங்கலை வேதியியல் முதலாமாண்டு**

## அன்னை..!

*அன்னையே*
*உன்னால் நான்*
*சிறுவலியைக் கூட*
*அனுபவிக்கக் கூடாது*
*என்று தவிக்கிறாய்*
*உன்னைப் பிரிந்த வலியை*
*எப்படி தாங்கிக் கொள்வேன்*
*என்று நினைத்து*
*என்னைப் பிரித்து இருக்கிறாய்..*

**மு.சிந்துஜா**
**இளங்கலை வேதியியல் முதலாமாண்டு**

*__அறநெறிச்சாரல் - 5__*

## அறிவுப்பந்தயம்

*ம்ம்ம்.. ஓடு ஓடு ஓடு அப்படித்தான் இன்னும் வேகமாக ஓடு. அப்பொழுதுதான் வருகிற உலகளாவிய குதிரைப் பந்தயத்திலே பல்வேறு நாட்டுக் குதிரைகளுடன் நீ ஜெயித்து வெற்றிக கோப்பையைக் கைப்பற்ற முடியும்..*

*ஹேஹ.. ஹேஹ.. ஓ..ஓ..ஓ.. ம்ம்ம்ம்.. என்று தன் குதிரையை விரைந்து ஓடும் முயற்சியில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தான் குதிரை வீரன் குமரன்.ஏனப்பா குமரா! மதியம் 12 மணி ஆகப்போகிறதே இன்னும் சோறு தண்ணி இல்லாமல் பயிற்சியிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாயே? வா கண்ணு வந்து சாப்பிட்டுவிட்டுப் பிறகு பயிற்சியில் ஈடுபடுப்பா. என்று தன் தள்ளாத வயதில் புருவங்களின் மேல் கைகளை குவித்துக் கண்களைச் சுருக்கித் தன் பேரனை அழைத்தார் சொக்குப்பொடித் தாத்தா.*

*இருங்க தாத்தா வந்து விடுகிறேன் இன்னும் ஒரே ஒரு முறை மட்டும் வேகமாக எல்லைக் கோட்டைத் தாண்டி வந்துவிடுகிறேன். அப்பறம் மாலைவரை எனக்கும் குதிரைக்கும் ஓய்வுதான். என்று கூறியபடியே குதிரையை வேகமமாகச் செலுத்தினான் குமரன்.*

*குமரன் தன் தாய் தந்தையை இளம் வயதிலேயே இழந்தவன். தாத்தாவின் பராமரிப்பில் வளர்ந்தவன். அவர் வகுத்த எல்லையைத் தாண்டாதவன். அவர் சொல்லும் அனைத்தையும் செய்பவன். தாத்தாவும் பூஞ்சோலை கிராமத்தில் மிகப் பெரிய குதிரைப் பந்தய வீரர் தான். அவர் செய்யாத சாதனையைத் தன் பேரனாவது செய்ய வேண்டும் என்று விரும்புகிறவர். தன் கனவை பேரன் நிறை வேற்றுவான் என நம்பிக்கைக் கொண்டிருந்தார்.*

*பூஞ்சோலையின் பக்கத்து ஊரான மாஞ்சோலையில் கோகுல ராமன் என்ற குதிரை வீரன் ஒருவன்*

*இருந்தான். அவனும் குதிரைப் பந்தயத்திலே கலந்து கொள்வதில் ஆர்வமாக இருந்தான். வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றுவதில் வெறியாக இருந்தான். எதைப்பற்றியும் கவலைப்படாதே! யாரையும் முழுமையாக நம்பாதே! உன் வாழ்கை உன் கையில்! வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக் கொள்! இருப்பினும் வெற்றி பெற முழு முயற்சியில் இறங்க வேண்டும். நல்லவர்களுடன் நட்பு கொள். இந்தச் சிவபெருமான் உனக்குத் துணையிருப்பார். வெற்றி உமதே! என்று நாள்தோறும் மந்திரம் ஓதியே தன் பேரன் கோகுலராமனை வளர்த்து வந்தாள் சொர்ணா பாட்டி.*

*ஒரு கால கட்டத்தில் சொக்குப்பொடித் தாத்தாவும் சொர்ணா பாட்டியும் ஒருவரையொருவர் விட்டுக் கொடுக்காமல் குதிரைப் பந்தயத்திலே கலந்து கொண்டு போட்டியிடுவர். ஆணுக்குப் பெண் இளைத்தவள் அல்ல எனச் சொர்ணா பாட்டி நிரூபிததுக் காட்டியவள். பெரும்பான்மையான போட்டிகளில் சொர்ணா பாட்டியே வெற்றி பெறுவாள்.*

*இதனைத் தாங்கிக் கொள்ள முடியாத சொக்குப் பொடித் தாத்தா போயும் போயும் ஒரு பெண்ணிடமே பலமுறை தோற்றுவிட்டோமே எனக் கூனிக் குறுகி நாணிப் போய்க் கதறி அழுவதும் உண்டு. எனினும் போட்டியில் கலந்து கொள்ளாமல் இருக்கமாட்டார். பல முயற்சிகள் செய்தும் அவருக்கு இரண்டாமிடமே கிடைத்தது. சொர்ணா பாட்டிக்கே முதல் இடம்.*

*போன தலைமுறையில் தான் வெற்றிப் பெற்றுக் கேடயங்களைப் பெற முடியாவிட்டாலும் இந்தத் தலைமுறையில் தன் பேரன் குமரனைப் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும் இல்லையேல் தன் இன்னுயிரை உடனடியாக மாய்த்துக் கொள்ள வேண்டும் என்ற இறுதி முடிவோடு இருந்தார் சொக்குப் பொடித் தாத்தா. தான் பெற்ற வெற்றி வியூகங்களைத் தன் பேரனுக்குக் கற்றுக் கொடுத்தாள் சொர்ணா பாட்டி.*

*அவளிடம் தன்னம்பிக்கை ஒன்றே இருந்தது. அறிவு முதிர்ச்சியும் கூடவே இருந்தது. அதனால் இந்த உலகளாவிய போட்டியில் தான் வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற தீர்மானத்தோடு இருந்தாள் சொர்ணா பாட்டி.*

*குமரனும் கோகுலராமனும் தங்களது குருக்கள் சொல்லையே வேத வாக்காகக் கொண்டு போட்டிக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.*

*யோவ் சொக்குப்பொடி இது நம்ம காலம் போல இல்ல.*

*இப்பவெல்லாம் மாயம் மந்திரமின்னு ஏதேதோ பண்றாங்க. நீயும் நம்ம ஊரு மந்திரவாதிக்கிட்ட ஒருமுறை போயிட்டு வாய்யா! அப்ப உன் பேரன் எளிமையா ஜெயிக்க வாய்ப்பு இருக்குமில்ல. போயா போ..*

*என்று சொக்குப்பொடி தாத்தாவை உசுப்பேற்றிக் கொண்டு இருந்தார் மூக்குப்பொடித் தாத்தா.*

*சரிடா மூக்குப்பொடி.. நீ ஏதோ சொல்ற. அதுக்காக வேணும்னா சாமியாரைப் போய் பாத்துட்டு வர்றேன்.*

*சீக்கிரம் போடா.. போட்டிக்கு இன்னும் இரண்டு நாள் தானே இருக்கு..?*

*ம்ம்ம.. போறேன்.*

*வணக்கம் சுவாமி! வாரும் சொக்குப்பொடியாரே! என்ன உங்க பேரன் போட்டியில வெற்றி பெற வேணும். அதுக்ககுத்தானே என்கிட்ட வந்துருக்க?*

*ஆமாம் சுவாமி சரியாச் சொன்னீங்க. நீங்கள் முற்றும் அறிந்த ஞானி என்பதை நிரூபித்து விட்டீர்கள்.*

*நீ சொல்வது தவறப்பா. எனக்கும் மேலே ஒருவன் இருக்கான்..*

*உங்கள் உருவில் சிவபெருமானையே பார்க்கிறேன் சாமி!*

*அந்த அளவிற்கு நான் இன்னும் பக்குவப்பட வில்லையப்பா.*

*நீங்களே இப்படி சொல்லலாமா?*

*சொல்லச் சொல்பவன் அவன் தானே..?*

*சரிங்க சாமி உங்களுடன் நான் போட்டியிட முடியுமா? தோல்வியை ஒப்புக்கொள்கிறாயா? முடியவே முடியாது சாமி! என் பேரனை வெற்றி பெற வைப்பதில் தான் என் உயிர் உள்ளது. இல்லையேல்...*

*சரிசரி வந்த விசயத்தைப் பேசலாம் சாமி..*

*நீதான் சொல்ல வேணுமப்பா,.?*

*என் பேரன் எப்படியோ இக்குதிரைப் பந்தயப் போட்டியில் வெற்றி பெற வேண்டும். அதுதான் எனக்கு வேணும் சாமி! அதற்குண்டான வழியைக் கூறுங்கள்.*

*ம்ம்ம்... அப்படியா? சரி. இந்தா மத்து, விலக்குமாறு, செறுப்பு... இந்த மூன்றையும் உன் பேரனிடம் கொடுத்து போட்டியின் போது பயன்படுத்தச் சொல்.*

*சுவாமி இதை வைத்துக்கொண்டு எப்படி வெற்றி பெறுவது சுவாமி.?*

*குறுக்கே பேசாதடா மடையா..! குதிரை ஓடிக்கொண்டிருக்கும் பொழுது மத்தால் ஓர் அடி அடித்தால் குதிரை 50 கல் தொலைவு வேகமாக ஓடும். இப்பொழுது யாரேனும் போட்டிக்கு வந்தால் அடுத்து விலக்குமாற்றால் குதிரையை ஓர் அடி அடிக்க வேண்டும். இப்பொழுது குதிரை 100 கல் தொலைவு வேகமாக ஓடும்.*

அதையும் மீறி எவரேனும் முந்திச் சென்றால் இறுதியாகக் கொடுத்த செருப்பால் ஓர் அடி அடிக்கச் சொல். இறுதியில் அவனே வெற்றி பெறுவான். மிக்க நன்றி சாமி! என் பேரன் வெற்றி பெற்றவுடன் உங்களிடம் அழைத்து வருகிறேன் சாமி.! நல்லது சொக்குப்பொடி சந்தோசமாய் போய் வா.! டேய் பேராண்டி நீ வெற்றி பெற்றுவிட்டாயடா! நீ தான்டா முதல் பரிசு பெறுவாய். என்று பிள்ளை இல்லா வீட்டில் கிழவன் துள்ளிக் குதிப்பது போல சொக்குப்பொடி தனக்குள் மகிழ்ச்சியாகத் துள்ளிக் குதித்து ஓடினான்.

விஷம் தாங்கிய மனதை உடையவனாக மூக்குப்பொடி நேராகச் சொர்ணாப் பாட்டியிடமும் சென்று சொக்குப்பொடி மந்திரவாதியிடம் போனதைக் கூறினான். அவளையும் வற்புறுத்திச் சாமியிடம் போகச் சொன்னான். இது போன்ற மாய மந்திரங்களில் சொர்ணாவிற்கு நம்பிக்கையில்லை. எனினும் இதனால் தன் பேரன் வெற்றி பாதிக்கக் கூடாதே என்று எண்ணியவள் நேராக மந்திரவாதியின் இல்லத்திற்குச் சென்றாள்.

என்ன சொர்ணா! உன் நம்பிக்கை தளர்ந்துவிட்டதா உன் உடம்பைப் போல.? இல்லை சுவாமி என் உடல் தளர்ந்தாலும் என் உள்ளம் தளரவில்லை. அந்த ஈசனைத் தான் உங்கள் வடிவில் பார்க்கின்றேன். நாள் தோறும் சந்தியாவதனம் செய்யும் அந்த ஈசனை நான் மதிக்கக் கூடியவள். அதனால் தான் உங்களை நாடி வந்தேன். உன் பக்தியும் நுண்ணறிவும் எனக்கு நன்றாகத் தெரியுமம்மா. உன் அறிவுக் கூர்மையே உன் பேரனுக்கு வெற்றியைத் தேடித் தரும். கவலைப்படாதே! இருந்தாலும் சுவாமி உள்ளாற ஏதொவொரு பயம் தொற்றிக் கொண்டுள்ளது. அதனை நீங்கள் தான் சுவாமி நீக்க வேண்டும்..

சரிம்மா! உன் வழிக்கே நான் வருகிறேன்.. இந்தா மத்து, விலக்குமாறு, செருப்பு. இந்த மூன்றையும் தக்க தருணத்தில் பயன்படுத்த வேண்டும். புரிந்து கொண்டேன் சுவாமி. அதாவது குதிரை ஓடுகின்ற பொழுது சமயம் பார்த்து ஒவ்வொன்றையும் கொண்டு அடிக்க வேண்டும் அவ்வளவு தானே..?

அடடே மிகச்சரியாகப் புரிந்து கொண்டாயே! நீ சமயோகிதப் புத்தியுள்ளவள் என்பதை காட்டிக் கொண்டேயிருக்கிறாய்...

*நான் அந்த சிவனின் பக்தை சுவாமி!.... நல்லது போய் வெற்றியுடன் திரும்பி வா மகளே!..*

*நன்றி சுவாமி..*

*போட்டி தொடங்கும் நாள் வந்துவிட்டது. போட்டிக்கு மாவீரர்கள் தயாராக நின்று கொண்டிருந்தார்கள்...*

*குமரனும் கோகுலராமனும் நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு பந்தயக் களத்தில் முனைப்புடன் நின்றனர்....*

**.....பந்தயம் தொடரும்...**


**முனைவர் இராம.தேவணன்**

**தமிழ் - உதவிப்பேராசிரியர்**


## உயிர் நட்பு

*தோழியே!*
*அன்று நீ என்னை*
*தோழியாய் ஏற்ற போது*
*நான் கூறும் சொற்கள்*
*உனக்கு இனித்தது..*
*ஆனால் இன்று நீ*
*ஏற்காத போது கசக்கிறது*
*இயல்புதான் இது..*
*முகம் பார்த்துப் பேசவே*
*நாணுகிறாய்*
*ஏன் இந்தக் கோபம்*
*வெறுப்பதாய் நினைத்து*
*வறுத்திவிடுகிறாய்*
*நமது அழகான நட்பை..*
*உனக்கு உரிமையிருக்கிறது*
*அடித்துவிட..*
*உரிமையிருக்கிறது*
*என்னைக் கொன்று தொலைக்க..*
*ஆனால்*
*உனக்கு உரிமையில்லை*
*நம் நட்பைக் காயப்படுத்த..*
*தண்டனையும் கொடு*
*மன்னிப்பும் கொடு*
*இரண்டிற்காகவும் காத்துக்*
*கொண்டிருக்கிறேன்..*
*இவற்றில் ஒன்றை*
*எனக்குக் கட்டாயம் கொடுத்துவிடு*
*நம் நட்பை மீண்டும் எழுப்பிவிடு..*
*வீழ்வது நாமாக இருப்போம்*
*வாழ்வது*
*நம் நட்பாக இருக்கட்டும்..*


**து.காயத்ரி**

**இளங்கலை வேதியியல் முதலாமாண்டு**


## ஜென்மம்

*ஒரு முறையேனும்*
*நான் இறந்து போகிறேன்*
*மறு ஜனனத்தை நம்பி..*
*அதிலாவது இணை பிரியாது*
*இருக்க வேண்டும்*
*மானசீக நட்பாக..*
*பிரியமுள்ள அன்பாக..*


**பா.லோகேஷ்**

**இளங்கலை வேதியியல் முதலாமாண்டு**

## வேண்டும் வெற்றி

*கருத்தரித்த பொழுதினிலே*
*கள்ளிப்பால் கொடுத்து*
*சாகும் குழந்தைகளுக்கும்*
*உருவெடுக்கும் பொழுதினிலே*
*அடுப்படியில் முடங்கிக் கிடக்கும்*
*பெண்களுக்கும்*
*தம் மன்னவர் இறந்த பின்னும்*
*ஏளனம் பேசும் உலகில்*
*வாழ முடியாமலும் போகும்*
*பெண்களுக்கும்*
*வேண்டும் வெற்றி...*

***கோ.தமிழரசு***
***இளங்கலை வேதியியல் முதலாமாண்டு***

## அறிவுரை

*சிரித்துக்கொண்டே இரு*
*உன்னை யாரும் வெறுக்காமல்*
*இருக்க..*
*நினைத்துக் கொண்டே இரு*
*உன்னை யாரும் மறக்காமல் இருக்க..*
*சிரிப்பு உன்னை வாழ வைக்கும்*
*நினைப்பு உன்னைச்*
*சிந்திக்க வைக்கும்..*
*சிரிப்பும் நினைப்பும்*
*வாழ்க்கையின் இரு சக்கரங்கள்..*

***ஹ.சீனிவாசன்***
***இளங்கலை வேதியியல் முதலாமாண்டு***

## வெற்றியின் மந்திரம்

*தீக்குச்சி உரசப்படாதவரை*
*இவ்வுலகம் இருட்டுதான்..*
*நம்முள் நம்பிக்கை*
*விதைக்கப்படாதவரை*
*மனம் கூடக் கருமைதான்*
*சிந்திக்கப்படாதவரை*
*தத்துவங்கள் பிறப்பதில்லை..*
*முயற்சி எடுக்காதவரை*
*வெற்றியின் விலாசம்*
*கிடைப்பதில்லை..*
*கைதட்டல்கள்*
*இல்லாமல்*
*விருதுகள் கிடைப்பதில்லை..*
*எழு தோழா..*
*நாம் எடுத்து வைக்கும்*
*ஒவ்வொரு அடியும்*
*எட்டுத்திக்கும் அதிரட்டும்*
*எழட்டும் சூரியோதயம்*
*நம்மைக் கேட்டு..*
*கொட்டட்டும் முரசு*
*நம் பாரத தேசம் பண்பிலும்*
*பாசத்திலும் பண்பாட்டிலும்*
*அன்பிலும் அறிவிலும்*
*அமைதியிலும் ஆளப்பிறந்தவர்கள்*
*இந்தியர்கள் என்று*
*இது வாழ்த்துப் பத்திரம் அல்ல..*
*நாளைய பூபாள உலகிற்கு*
*வாசிக்கப்படும்*
*பாராட்டுப் பத்திரம்*
*புறப்படுவோம் புதுயுகம் காண*
*என்றென்றும் புன்னகையுடன்..*

***இரா.கார்த்திகா***
***இளங்கலை வேதியியல் முதலாமாண்டு***

## அரிய தகவல்கள்..

*கேரளாவைச் சேர்ந்த சந்தோஷ் ஜார்ஜ் குவென்கரா என்பவர் விண்வெளிக்குச் சுற்றுலா செல்கிறார். இவர்தான் விண்வெளிக்குச் சுற்றுலா செல்லும் முதல் இந்தியர்.*

*2007 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் தேதி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா பெர்முடா அணிக்கு எதிராக 413 ரன்கள் எடுத்து உலக மகா சாதனையைப் படைத்துள்ளது.*

*இலையுதிர் காலம் என்ற நாவலை எழுதியதற்காகத் தமிழகத்தைச் சேர்ந்த நீல பத்மநாபனுக்கு 2007 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.*

*தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த முதல் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் ஆவார்.*

*சச்சின் அவரது 400 ஆவது ஒருநாள் போட்டியை ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடினார்.*

*இந்தியாவின் முதல் தீயணைப்புத்துறை அதிகாரி மீனாட்சி விஜயகுமார்.*

*தமிழ்நாட்டில் 31 ஆவது மாவட்டம் அரியலூர்.*

**ஜி.தேன்மொழி**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

### எங்கள் ஆசிரியர்

*வாழ்க்கை எனும் பாதையில்*
*பயணித்து வந்து*
*கல்லூரி எனும் பூச்செடியில்*
*மலர்களாய் மலர்ந்து*
*அமர்ந்திருக்கும்*
*மாணவச் செல்வங்களை*
*வெற்றி எனும் பாதையில்*
*பயணிக்க..*
*துயரங்களைத் துறத்தி*
*துக்கங்களைப் போக்கி*
*தோல்விகளைப் படிகளாக்கி*
*சோதனைகளைச் சாதனைகளாக்க*
*மாணவச் செல்வங்களின்*
*மனங்களை அறிந்து*
*கல்வி எனும் சோலையில்*
*கற்பகமாய் வீற்றிருக்க*
*தன் குழந்தைகளாக*
*அனைவரையும்*
*அரவணைத்துக் கல்வி கற்பிப்பதே*
*எங்கள் ஆசிரியர்..!*

**ஆர்.வினோதினி**
**இளங்கலை கணிதம்**
**இ பிரிவு முதலாமாண்டு**

### பாரதி

*முண்டாசு பாரதியே*
*மூத்த அறிஞரே*
*முக்காலமும் அறிந்தவரே*
*முத்தமிழையும்*
*உணர்ந்தவரே*

*தீர்க்கதரிசியே*
*தீர்க்கமானது உன் முடிவே!*
*தீண்டாமையை*
*ஒழிக்க தினம் தினம்*
*பாடுபட்டவரே!*
*அஞ்சாமை இருப்பதோ*
*உன் அரிய குணம்*
*அறிவும் பேச்சும்*
*ஆற்றல்மிக்கவரே!*
*மீசைக்கவிஞனே*
*உன்னை என்றும்*
*யாம் மறவேன்..!*

***ர.ராகவி***
***இளங்கலைக் கணிதம் இ பிரிவுமுதலாமாண்டு***

## பொன்மொழி

*நண்பனையும் நேசி*
*எதிரியையும் நேசி*
*நண்பன்*
*உன் வெற்றிக்குத்*
*துணையாய் இருப்பான்*
*எதிரி*
*உன் வெற்றிக்குக்*
*காரணமாய் இருப்பான்*

***ஆர்.பூர்ணிமா***
***இளங்கலை வணிகவியல் முதலாமாண்டு***

## தாய்மை

*கருவறையில் என்னை உயிர்த்தாய்*
*அந்த இருட்டறையில்*
*என்னைச் சிறைவைத்தாய்..*
*உன்னை உருக்கி*
*என்னை உருவாக்கினாய்*
*ஈரைந்து மாதம் சுமந்து*
*இமையெனக் காத்தாய்..*
*உயிர்வலி தந்தேன்*
*உன்னை உதைத்து*
*உலகைப் பார்த்தேன்..*
*இருந்தும்*
*என்னை முத்தமிட்டு மலர்ந்தாய்*
*என் கண்ணீரால்*
*உன் பாதங்களை*
*துடைத்தாலும் என் நன்றிக்கடன்*
*தீராதம்மா..*
*உன் தாய்மை கண்டு*
*சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்..!*

***செ.கௌரி***
***இளங்கலை வணிகவியல் முதலாமாண்டு***

## வறுமை

*கொண்டு வந்த ஒன்றையும்*
*கொண்டு செல்லாத ஒன்றையும்*
*துன்புறுத்தும் வறுமை*
*மனிதன் வறுமை எனும்*
*கடலில் தத்தளித்து*
*கல்வி கற்றுச் சான்றோன்*
*எனும் கரையை அடைகிறான்..*
*தண்ணீர் இல்லாத குளத்தில்*
*துடிக்கின்ற மீனாக*
*பாறையின் மீது விழும்*
*நீரைப் போல..*
*கண்ணாடியில் சேராத*

பாதரசம் போல..
துடிதுடித்து இணையாத ஒன்று
வறுமை..
மனிதன் வறுமை
இருளில் வீழ்கிறான்..
கல்வி கற்று
வைரம் போல் மிளிர்கிறான்..

**சு.விஜய சரவணன்**
**இளங்கலை வணிகவியல் முதலாமாண்டு**

## ஆயுத பூஜை

ஆயுத பூஜை
உண்மையிலே
அது ஆயுதத்திற்கான பூஜைதான்..
எல்லாக் கோயில்களிலும்
அரிவாளோடு ஆண்கள்..
பலி கேட்கவில்லை
இருந்தும்
பழியோ இறைவன் மீது..
ஆம்!
அங்கும் அபிஷேகம்
ஆயதத்திற்குத்தான்..
அனைத்து மசூதிகளிலும்
துப்பாக்கி முனையில்
இறைவன்..!
கேட்டால் பாதுகாக்கின்றோம்
தோட்டாக்களாக்க வீரர்கள்
ஆம்!
அங்கும் ஆயதத்திற்குத்தான்
பிரார்த்தனை..
அனைத்துத் தேவாலயங்களிலும்
இன்னும் சிலுவைகள்
இருக்கின்றனவாம்
ஏசுவை முழுமையாக
அறையவில்லையாம்..
இப்படி ஆயிரம் கோடி
ஆயுதங்களை
வைத்துக் காக்கின்றோம்
அன்பையும் அமைதியையும்
இங்கு
அன்புக்கு இடமில்லை..
ஆயதத்திற்குப் பஞ்சமில்லை..
ஆயதமே நீ ஆயுதமாகிவிட்டாய்
உண்மையிலேயே
அதுதான் ஆயதபூஜை..!

**பெ.லோகநாதன்**
**இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு**

## நட்பு

இரண்டு மூன்று வருடங்களுக்கு
முன்னால்
நீயும் நானும் சேர்ந்து
நனைத்த குடை
அடுத்த நாள்
காலையிலேயே
காய்ந்துவிடுகிறது..
மூன்று வருடங்கள்
முடித்த பின்பும் கூட
இன்னும் ஈரமாகவே கிடக்கிறது
நம் நட்பில் நனைத்த நினைவுகள்..

**ஆர்.அனிதா**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

### அம்மா

*பாசத்தை மொத்தமாய்*
*உணவை மிச்சமாய்..*
*வலியை துச்சமாய்..*
*பத்துமாதம் பொறுத்தாய்*
*பச்சிளமாய் என்னைக் காண..*
*நீ என்னைப் பெற்ற நேரம்*
*உன் விழி ஈரம்*
*நான் தந்த*
*வலியையும் மறந்து*
*என் முகம் பார்த்துச் சிரித்தாயே*
*அந்தச் சிரிப்பைப் பார்த்து*
*ஒன்றும் புரியாமல்*
*திகைத்தேன்*
*என்னை மறந்தேன்*

**ஆர்.அனிதா**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## தொடுவானம் தொலைவில் இல்லை

*ரோஜா செடி வாடினால்*
*தண்ணீர் விடு..*
*மற்றவர் வாடினால்*
*ஆறுதல் துளிர் விடு..*
*நீ வாடினால்*
*நம்பிக்கை ஊற்று விடு..*
*அது உன்னை*
*வாழ்வின் கரையில் சேர்க்கும்*
*நிலவையும் நேச்கிறாய்*
*மறையும் என்று தெரிந்தும்..*
*கனவையும் நேசிக்கிறாய்*
*கலையும் என்று தெரிந்தும்..*
*இரவையும் நேசிக்கிறாய்*
*விடியும் என்று தெரிந்தும்*
*இதையெல்லாம் நேசித்த நீ*
*உன் வாழ்க்கையை*
*வளமாக்கும்..*
*நம்பிக்கையை மட்டும்*
*ஏன் யோசிக்கிறாய்..?*

**இரா.யோகலட்சுமி**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

### நிஜத்தில் நான்..

*உறங்கும் பொழுது*
*பல கனவுகள்..*
*உயர்ந்த இடத்தை*
*அடைந்ததைப் போலவும்*
*பெரிய செல்வங்களை*
*அனுபவிப்பது போலவும்*
*நான் புத்தருக்கு எதிரானவன்*
*நிஜத்தில் நான் ஒரு*
*பேராசைக்காரன்..*

**பி.விக்னேஷ்**
**கணினிப் பயன்பாட்டியல்**
**அ பிரிவு முதலாமாண்டு**

### அம்மா..!

*நான் நிலவாய் இருக்கும் போது*
*வானமாய் இருந்து என்னைக்*
*காத்தாய்..*
*நான் மலராய் இருக்கையில்*
*நறுமணமாய் இருந்து*
*வாழ்வினைத் தந்தாள்..*

*நான் மரமாய் இருக்கையில்*
*நல்வேராய் இருந்து*
*உயிர் தந்தவள்..*
*நான் கனியாய் இருக்கையில்*
*தேன் சுவையாய்*
*இருந்து சுவைக்கச் செய்தாள்..*
*நான் துக்கத்தில் இருக்கையில்*
*தோழியாய் இருந்து*
*தோள் கொடுத்தவள்..*
*நான் இருக்கும் வரை*
*வாழ்வேன் எனச் சொல்லி*
*ஒவ்வொரு நொடியும்*
*வாழ்ந்து வந்தாள்..*
*அவள் செய்யும் காரியம்*
*அனைத்தையும்*
*என்னிடம் சொல்லிச் சொல்லியே*
*செய்து வந்தாள்..*
*ஆயினும்*
*அவள் இறப்பதை மட்டும்*
*ஏன் என்னிடம் சொல்லவில்லை..*

**பா.சபிதா**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## தந்தை தேசம்

*தந்தையே*
*நீர் உன் ரத்தத்தை*
*வியர்வையாக்கி*
*என் தாகம் தீர்த்து*
*இராப்பகலாய் உடலை வருத்தி*
*எனக்கு உணவைக் கொடுத்து*
*நீ பட்டினியாய் கிடந்தேனும்*
*எனக்குப் பட்டுத்துணியும்*
*பஞ்சு மெத்தையும் அளித்து*
*கல்,மண் சுமந்து*
*வேலை செய்தேனும்*
*எனக்குக் கல்வியைக் கொடுத்து*
*என் வாழ்க்கை சிறப்பாய் அமைய*
*நல்ல நெறிகளைக் கற்றுக்*
*கொடுத்து*
*பகலில் எனக்குச் சேவகனாய்*
*இரவில் எனக்குக் காவலனாய்*
*இருந்து*
*என் அச்சம் தவிர்த்து*
*என்னைக் கரையேற்றிய தோணியே!*
*நான் வணங்கும் கடவுள் நீ தானே!*
*என் அருமைத் தந்தையே..!*

**ச.சங்கீதா**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## பொது அறிவு

*1) உலகில் அதிக கிராமங்களைக் கொண்ட நாடு எது? - இந்தியா*

*2)புன்னகையின் நாடு என அழைக்கப்படும் நாடு எது?*
*- தாய்லாந்து*

*3)ஏமாற்றத்தின் ஏரி உள்ள இடம் எது?*
*- ஆப்பிரிக்கா*

*4)ஆயிரம் ஏரிகள் நாடு என்று எந்த நாட்டை அழைக்கின்றோம்? - பின்லாந்து*

*5) மஞ்சள் ஆறு என்பது எது? - ஹீவாங்ஹோ*

*6)உலகத்தின் கூரை என அழைக்கப்படுவது?*

*- பாமீர் பீடபூமி*

*7)எமரால்டு தீவு என்று அழைக்கப்படும் நாடு எது?*

*-அயர்லாந்து*

*8)கங்கை நதியின் வேறு பெயர் என்ன?*

*-பாகீரதி*

***தொகுப்பு - செ.கயல்விழி***

***இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு***

## விடியல்

*விடியலே!*
*நீ தோன்றும் முன்*
*உன்னைப் பற்றிய*
*நினைவுகள்*
*அனைவருக்கும் தோன்றுகிறது..*
*விடியலே*
*நீ எங்களைப் பார்ப்பதற்கு முன்*
*உன்னைக் காணக்*
*காத்துக்கொண்டிருக்கிறோம்..*
*விடியலே!*
*நீ தோன்ற தோன்ற*
*எங்களுடைய*
*புத்துணர்வும் தோன்றுகிறது..*
*விடியலே!*
*உன்னைக் கண்டு*
*பூக்கள் பூக்கும் அழகை*
*காண எனக்கு*
*இரு விழிகள் போதவில்லை..*
*விடியலே*
*எங்களுடைய நேரத்தைக்*
*கடத்திச் செல்லும் நீ*
*எங்களுக்குப் பாரமாகவும்*
*இருக்கிறாய்*
*உன்னைக்கண்டு தான்*
*இந்த உலகம் விழிக்கிறது..*
*விடியலே!*
*ஒரு வினாடி கூட*
*உன்னை நினைக்காதவர்கள்*
*இந்தப் பூவுலகில் இல்லை..*
*விடியலே!*
*உன்னை வருணிக்க*
*நான் வார்த்தைகள் தேடினேன்*
*ஏமாற்றமே மிச்சம்*
*அதுதான் இன்னும் உன்னைக்கண்டு*
*வியக்கிறேன்..!*

***ச.ரம்யா***

***கணிதவியல் இ பிரிவு இரண்டாமாண்டு***

## அப்பா..!

*பத்து மாதம் சுமந்திருந்து*
*மூன்றுவருடம் விழித்திருந்து*
*குழந்தையை வளர்த்ததுடன்*
*முடிந்தது தாயின் கடமை..*
*தந்தையின் கடமை முடிவதற்கோ*
*முப்பது ஆண்டுகளுக்கும் போதாது..*
*தாயின் கைவிட்டு*
*தந்தையின் கைப்பிடித்து*
*பள்ளிச் செல்லத் தொடங்கியதும்*
*தொடர்ந்தது தந்தையின் கடமை..*

நல்ல கல்வி தரவேண்டி – தந்தை
நாயாய் பேயாய் அலைந்து உழைத்து
பணத்தை மூட்டைக்கட்ட வேண்டும்
படித்த படிப்புக்கு வேலை வாங்க
படாதபாடு பட்டேனும்
பல லட்சம் தரவேண்டும்
வேலை கிடைத்த கையோடு
திருமண வேலை ஆரம்பம்..
மருமகளோ மருமகனோ
வந்துவிட்டால்
குடும்ப மரியாதை காக்க
தனக்கென அதிகமாய் உழைத்து
தன்மானமாய் வாழ்வதற்கு
வகையாய் பணம் சேர்த்தல் வேண்டும்..
பேரன் பேத்திகள் தன் பெயர் சொல்ல
சொத்து சேர்த்து வைத்திடல் வேண்டும்
சுடுகாடு போகும் வரையிலும்
தந்தை கட்டாயம்
உழைத்திட வேண்டும்
இத்தனை உழைப்பிற்கும்
தந்தைக்கு இல்லை
முதல் மரியாதை..
தாய்க்கு மட்டும் தரணியில்
முதலிடம்..
ஐயோ பாவம் தந்தையார்..
அப்பப்பா பாவமப்பா அப்பா..!

**செ.வான்மதி**

**இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு**

## கடவுள்

கடவுளைத் தேடித் தேடி
தேய்ந்து போனத கால்கள்
காண முடியவில்லை என்று
காய்ந்து போனது கண்கள்..
இறுதியில்
இமைகளை மூடினேன்
ஞானம் பிறந்தது
கையில் அடிபட்டால்
கடவுளா பதறுகிறான்..?
சாப்பிடல்லையென்றால்
கடவுளா ஊட்டிவிடுகிறான்?
வேதனையில் இருக்கும்பொழுது
கடவுளா கண்ணீரைத்
துடைக்கிறான்?
இல்லை இல்லை
பத்து மாதம் கருவில் தாங்கி
பெற்றெடுத்த தாயே
அத்தனையையும் செய்கிறாள்
கண்டுகொண்டேன் கடவுளை..!

**கீ.ச.ஜகதீஸ்வரி**

**இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு**

## ஊக்கம் - சிறுகதை

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விசயத்திற்காக ஏங்குகிறான். சிலர் பொருள், உணவு, பணம் இந்த வகையில் ஊக்கமும் அடங்குகிறது. அது எப்படி என்று கேட்கிறீர்களா..? சத்யாவும் பிரியாவும் ஒன்பதாம் படிக்கின்ற மாணவிகள். சத்யா சென்னையிலும் பிரியா கள்ளிக்காடு எனும் குக்கிராமத்திலும் வசித்துப் படித்து வந்தனர். இருவரும் வேறு வேறு ஊர்களில் வசித்து வந்தாலும்

*இருவருக்கும் உள்ள ஒற்றுமை என்ன தெரியுமா? இருவருமே சிறந்த பேச்வசாளர்கள்.. இந்தத் திறமை தன்னிடம் இருக்கிறது என்பதைச் சத்யா அறிவாள். ஆனால் பிரியா அறியவில்லை..*

*பள்ளியில் மாநில அளவிலான பேச்சுப் போட்டி அறிவிப்பு ஒன்று வருகிறது.. இதில் சத்யா தன் பெயரைப் பதிவு செய்து கொள்ளுமாறு ஆசிரியரைக் கேட்க, ஆசிரியரோ முதலில் ஒழுங்கா படி அப்புறம் பேசிக் கிழிக்கலாம் என்று கடிந்து விடுகிறார். சத்யா மனச் சங்கடத்துடன் வீட்டுக்குள் நுழைகிறாள். ஆனால் பிரியாவிற்கோ நிலைமை வேறு. தன்னிடம் இல்லாத திறமை ஒன்றை இருப்பதாகக் கூறிய ஆசிரியரை அணுகிப் பயத்துடனே கேட்கிறாள் 'சார் என்னால பேச முடியாது சார். பயமா இருக்கு சார்' என்று கூச்சப்படுகிறாள்..*

*'பயப்படாத பிரியா கண்டிப்பா நீ தான் ஸ்டேட் பஸ்ட் வருவ பாரேன்' என்று மிகவும் உயர்த்திப் பேசிவிடுகிறார்.. படிப்பில் கெட்டிக்காரியாக இருந்த பிரியாவை பேச்சாளராகவும் உயர்த்த வேண்டும் என்பது ஆசிரியரின் எண்ணம்..*

*போட்டி நாள் வருகிறது. கலந்து கொண்ட 300 மாணவர்களில் முதல்பரிசினைப் பிரியா பெறுகிறாள்.. பிரியாவினால் இதனை நம்ப முடியவில்லை கண்ணீர் தாரை தாரையாக ஊற்றுகிறாள். தனது வெற்றியை ஆசிரியருடன் பகிர்ந்து கொள்கிறாள். பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்விலும் பள்ளியில் முதல் மாணவியாக தேர்ச்சி பெறுகிறாள். கள்ளிப்பட்டிக் கிராமத்திற்கு கலெக்டர் வருகை புரிந்து பிரியாவின் பெற்றோரையும் ஆசிரியரையும் கௌரவப்படுத்திச் சென்றார்..*

*திறமை இருந்தும் ஊக்கப்படுத்த ஆளில்லாமல் சத்யா படிப்பிலும் தோல்வியடைந்தாள்.. தனது திறமையை எதுவென்று அறியாதிருந்த பிரியா மாநிலத்தில் முதலிடம் பிடித்துச் சாதனை புரிந்தாள். காரணம் ஆசிரியரின் ஊக்கம் மட்டுமே..*

*ஒரு புதுக்கவிதை ஒன்று இருக்கிறது*

*ஊக்குவிக்க ஒருவன் இருந்தால்*
*ஊக்கு விற்பவனும்*
*ஒரு நாள் தேக்கு விற்கலாம்..*

***மைதிலி பாஸ்கரன்***
***துகிலியல் மற்றும்***
***ஆடைவடிவமைப்புத்துறை***

## ***வாழ்க்கை***

*தமிழைப் போல்*
*வாழக்கை எளிமையாக*

அமைய ஆசைப்பட்டேன்..
ஆனால்
ஆங்கிலம் போல்
வாழ்வில் பல அவஸ்தைகள்..
கணிதம் போல் வாழ்க்கையைக்
கணித்து வாழ்ந்து வந்தேன்
இருந்தும்
என் இயல்பு வாழ்க்கையில்
இயற்பியல் போல்
பல இன்னல்கள்..
அதனால் தான்
வேதியியல் மாற்றங்கள் என்னுள்..
என்ன செய்வேன்..?
உயிரியல் வாழ்க்கையை
உலகில் உலாவ விடுவதற்குள்
கணினி உலகத்தோடு
ஒன்றறக் கலந்துவிட்டேன்

**பெ.லோகநாதன்**
**இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு**

## சுதந்திரக் காற்று

கங்கை காவிரி வைகை
பாயும் நாட்டில்
நீருக்குப் பஞ்சம்..
நெல் சோளம் கோதுமை
விளையும் நாட்டில்
உணவுக்குப் பஞ்சம்..
பற்றபல பூக்கள் பூத்துக் குலுங்கும்
எழில்மிகு நாட்டில்
இயற்கைக்குப் பஞ்சம்..
அண்ணல் காந்தியடிகள்
பிறந்த அகிம்சைந ாட்டில்
அமைதிக்குப் பஞ்சம்..
வீரம் விளைந்த நம் திரு நாட்டில்
வெற்றிக்குப் பஞ்சம்..
மழைநீர் பொழியாத
செழிப்புமிகு நாட்டில்
மதுநீர் பொழிகிறது..
உயிர்களைக் காக்கும்
உன்னத திருநாட்டில்
உயிர் வேட்டை நடக்கிறது..
பெண்மை காக்கும் நாடாம்
அதில் பேரழிவு ஒரு கேடாம்..
சுதச்திரம் கொண்ட நாட்டில்
சுதந்திர உரிமையில்லை..
சட்டத்திட்டம் கொண்ட நாட்டில்
ஓட்டைகளின் ராஜ்ஜியம்..
இன்னும் சுவாசிக்கவில்லை
சுதந்திரக்காற்றை..

**பெ.லோகநாதன்**
**இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு**

## ஆண்

ஆண் என்றால் அகந்தை
தோள் மீது ஏறிவிடுகிறது
என்னவோ உலகையே
வென்றவன் போல..
அப்பாவிடம் பாக்கெட் மணி
வாங்கும்
இவனுக்கு எதற்கு
அடுத்த வீட்டுக்காரனின் மகள்..?
காதல் என்னும் கத்திரிக்காயைக்
காரணம் காட்டுகிறான்..
காதலியோ வேறு ஒருவனைத்

திருமணம் முடிக்கிறாள்..?
இவனின் அப்பா
நண்பர் பெண்ணைக்காட்ட
அம்மா தனது
அண்ணன் பெண்ணைக் காட்ட
இவனோ தனது
நண்பன் காதலியைக் காட்டி
காலைவாரிவிடுகிறான்..
கடவுளும் மனைவியும்
ஒன்றெனக் கருதியது
அன்றைய ஆண்வர்க்கம்
இன்றோ எல்லாம்
டேக் இட் ஈஸி என்கிறது..
காதல் என்பது
கான்கிரீட் சுவர் மாதிரி
கவனமாய் கட்டுவதும்
அரைகுறையாய்
அமைத்துக் கொள்வதும்
அவரவர் கையில் தான்..
உன் மீது உனக்கே நம்பிக்கை
இல்லாத போது
எப்படி உன்னை ஒரு
பெண் நம்பி வருவாள்..?
ஆண்மகனே
முதலில் நீ யாரென்று
இந்த உலகிற்குக் காட்டு
பிறகு
இந்த உலகமே உன்னை
காதலிக்கத் தொடங்கும்..
காதல் ஒரு பொழுதுபோக்கு
விளையாட்டல்ல
வாழ்க்கை விளையாடுவதற்கான
ஒரு பொம்மை அல்ல..!

**எஸ்.சூர்ய பிரபா**
**இளங்கலை நுண்ணுயிரியல் முதலாமாண்டு**

## அறிவிப்பு

- விடியல் படைப்புகள் தங்களால் படைக்கப்பெற்றதாக இருக்க வேண்டும்..
- விடியல் படைப்புகளைத் தங்களின் தமிழ்ப் பேராசிரியர்களிடம் பெயர், துறை, பிரிவு, பயிலும் ஆண்டு முதலான முகவரிகளுடன் ஒப்படைக்கவும்